செ.கு.எண்: 46 நாள்: 31/01/2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

**அறிக்கை – 31.1.2012**

புதுடெல்லியில் தமிழக சிறப்புக் காவல் படை எட்டாம் அணியில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சூரியநாராயணமூர்த்தி அவர்கள், விடுப்பில் சொந்த ஊருக்கு வந்திருந்தபோது, 30.1.2012 அன்று ஓட்டப் பயிற்சி மேற்கொள்கையில் மாரடைப்பு ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர் திரு. சூரியநாராயணமூர்த்தி தனது பணி காலத்தில் காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. சூரியநாராயணமூர்த்தி அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர் திரு.சூரியநாராயணமூர்த்தி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9